RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS
DOI: 10.34256/irjt22s58

# பெண்ணியத்தில் திராவிட எழுத்தாளர்களின் பங்கு

## மா. மாதேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா.

# The Role of Dravidian Writers in Feminism

## M. Madheswari [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: madheswariraju9@gmail.com

Received: 20-08-2021
Revised: 09-04-2022
Accepted: 21-04-2022
Published: 04-07-2022

Check for updates

**ABSTRACT**

Our women were the ones who deserved admiration and respect in ancient times. Were heavily denigrated in the intervening period in the middle. Women completely lost their rights due to such a situation. They were enslaved, enslaved, and oppressed as female demons. Femininity was then spoken of as inferior. To study for a woman in the oven as a way of depriving them of their education? Their education was completely denied. The women were saddened to see such cruelty. It was then that some of the greats of Chandor came to abolish slavery and offered to abolish female slavery as well.

**Keywords:** Equality, Rights, Dowry, Coercion, Anti-Conspiracy Law, Programs for women

## முன்னுரை

பெண்களின் அடிமைத்தனமானது ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ, எல்லைக்கோ கட்டுப்படாமல் உலகம் முழுவதும் பரவியிருந்தது. சமூகத்திலும் வேலைத்தளத்திலும் நிலவும் ஒடுக்குமுறை, சுரண்டல் பற்றிய உணர்வு நிலையை மாற்றுவதற்கு ஆண், பெண் இருவரும் உணர்வுப்பூர்வமாக எடுக்கும் நடவடிக்கையைத்தான் 'பெண்ணிலை வாதம்' என்கிறோம் (Vijayalakshmi, 2021). பெண்கள் வீடு, சமூகம் என அனைத்து இடங்களிலும் நசுக்கப்படுவதை பெண்ணிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளின் மூலம் வெளிப்படுத்தி சரிநிகர் சமத்துவ மதிப்பீடுகளை மாற்றி கருத்துக்களை வகைமைப் படுத்தி விழிப்படையச் செய்கின்றனர் (Sutha et al., 2020; Vijayalakshmi, 2022).

இத்தகையச் சூழலில் நம் தமிழ்நாட்டில் பெண்ணுலகத் தொண்டிற்கு முதன்முதலில் வித்திட்டவர் மாயூரம் வேத நாயகம் பிள்ளை ஆவார். இவர் பெண்கல்விக்காக ஒரு நூலை எழுதியுள்ளார். அறிவைப் புகட்டி மாண்புள்ளவராக ஆக்க வேண்டும் என்பதற்காக 'பெண்மதிமாலை' என்ற நூலை பெண்களுக்காகவே எழுதினார். அவருக்குப் பின் வந்த சான்றோர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் பெண் ஏன் அடிமையானாள்? என்ற புத்தகத்தில் பெண்கள் எப்படியெல்லாம் அடிமைப்படுத்தப்பட்டனர் என்பதனை விவரிக்கும் வகையில் அந்நூலை எழுதினார். பெண்ணை அடக்கி ஆளுதல் என்றப் பொருண்மையை அகராதியில் இருந்து முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்பதை அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், ஏ.வி.பி ஆசைத்தம்பி, புதுவை சிவம் போன்ற திராவிட இயக்க எழுத்தாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## பெரியார் போற்றும் பெண்கள்

மனிதப் பிறவி கொண்ட ஆணும் பெண்ணும் இயற்கை நிலையிலும், வாழ்க்கை நிலையிலும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை சமமானவர்கள் தான் என்பதனை ஏற்க இச்சமுதாயம் மறுக்கிறது. அங்க அமைப்பிலன்றி, அறிவிலும் வீரத்திலும், துணிச்சலிலும் ஆண் - பெண் என ஏற்றத்தாழ்வான வித்தியாசம் எதுவும் கிடையாது என்பதனை வலியுறுத்தவே பெண்களுக்காக முதன்முதலில் குரல் கொடுத்த மாபெரும் தலைவர் தந்தை பெரியார் ஒருவரே என்பது நிரூபணம்.

ஒரு பெண்குழந்தை பிறப்பதில் இருந்து பிறந்த பின்பு வளரும் சூழ்நிலை வரை அனைத்திலும் பாகுபாட்டைப் புகுத்திக் கொண்டு அறியாமையில் மூழ்கிக் கிடந்த மக்களை பகுத்தறிவுடன் சிந்திக்கவும், அடிமை நிலையிலிருந்து மீளவும் தனது எண்ணற்ற மேடைப் பேச்சுக்கள் மூலமும், தனது எழுத்துக்கள் மூலமும் சிந்திக்க வைத்தவர் தந்தை பெரியார்.

இந்தியப் பெண்கள் கல்வியறிவில் பின்தங்கியவர்கள். அவர்களைக் குடும்பம் என்னும் வட்டத்திற்குள் குடும்பக் கலை, கோலம், கும்மிப் பாட்டு இவைகளைத் தவிர அறிவை வளர்க்கும் கல்வி இவர்களிடத்தில் இல்லை, முற்றிலும் பிள்ளை பெறும் இயந்திரமாகவே உள்ளனர். குழந்தைத் திருமணம் என்னும் பந்தத்தால் சிறுவயதிலே நோய்வாய்ப்பட்டு இறக்கவும் நேரிட்டது.

## கல்வியின் மேன்மை நிலை

பெண்கள் சுதந்திரமாகவும், சுயமாகவும் சிந்திக்க வேண்டுமென்றால் கல்வி மிக அவசியம். அக்கல்வி அறிவின் மூலம் தாங்களாகவே தங்கள் வாழ்க்கையை நடத்தக் கூடிய அளவிற்கும் சுயமாகத் தொழிலை ஏற்படுத்திக் கொண்டு வாழ்வில் வளம் பெறுவதற்கும் கல்வியே முக்கியப் பங்கு வகிக்கிறது. அத்தகையக் கல்வி பெண்களுக்கு எளிதாக கிடைத்துவிடவில்லை பல போராட்டங்களுக்குப் பின்பு தான் கிடைத்தது.

ஆண்களைப் போல் ஓடவும், மல்யுத்தம் செய்யவும், ஆண்கள் செய்யக் கூடிய அனைத்து வேலைகளையும் பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டும். சாலையில் வாகனங்கள் ஓட்டுவதில் இருந்து வானில் விமானம் ஓட்டும் அளவிற்கு அனைத்திலும் முதன்மை பெற வேண்டும். தங்கள் நாட்டிற்காக நாட்டுப்பணி ஆற்றவும் முன்வர வேண்டும்.

மேலும் தொழிற்கல்வியிலும், நிர்வாகத்திலும் உயர்பதவி பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் பெரியார். ஒரு ஆண் கல்வி கற்றால் அக்கல்வி அவனுக்கு மட்டுமே பயன்படும். ஆனால் அதுவே ஒரு பெண் கல்வி கற்றால் அத்தலைமுறைக்கே அக் கல்வி பயன்படும் என்கிறார். நம்முன்னோர்கள் வாழ்ந்ததை விட சிறப்பாக வாழ்ந்து சமுதாயத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

## பெண்களுக்கான உரிமைகள்

நம் நாட்டில் ஆண்களுக்கு ஒரு சட்டம் பெண்களுக்கு ஒரு சட்டம் என்ற நிலை உள்ளது. ஆண்களுக்குப் பெண்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்களில்லை. ஆண்களோடு முன்னேற வாய்ப்பும், வசதியும், உரிமையும் அளித்தால் அவர்களும் சிறந்து விளங்குவார்கள்.

பெண்களின் உரிமைகள் பற்றி நிறைய அறிஞர்கள் பேசினாலும் அவையனைத்தும் வெறும் மேடைப் பேச்சாகவே இருந்தன. ஆனால் பெரியார் மட்டுமே அப்பேச்சுக்கு உயிர் கொடுத்தார். பெண்களுக்கு கல்வியில் உரிமை வேண்டும் என்றும், திருமணத்தில் சுயமாக முடிவெடுக்கும் உரிமையும், சொத்துரிமை, விதவைகளுக்கு மறுமணம், வாக்குரிமை, பெண்களுக்கு வேலை வாய்ப்பு, இடஒதுக்கீடு, அரசியலில் முன்னுரிமை போன்ற அனைத்தும் பெரியார் ஒருவரால் தான் சாத்தியமானது.

பெண்கள் எங்களுக்கு உரிமை வேண்டும் என்று கூக்குரல் கொடுத்தால் மட்டும் போதாது. களத்தில் இறங்கி போராட வேண்டும் என்று கூறுகிறார். அப்படி சொன்னால்தான் வீட்டிற்குள்ளேயே இருக்கும் பெண்கள் வெளியில் வருவார்கள் என்றும், சமஉரிமைகள் பற்றியும் பல மேடைகளில் பேசியுள்ளார். "பெண்களுக்கு ஆண்களைப் போலவே சொத்துரிமைகளும் வாரிசு பாத்தியதைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்றும், பெண்களும் ஆண்களைப் போலவே எந்தத் தொழிலையும் மேற்கொண்டு நடத்தி வருவதற்கு அவர்களுக்கு சமஉரிமையும், அவகாசமும் கொடுக்கப்பட வேண்டும் என்றும், பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்க்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயர் வேலைக்குப் பெண்களை நியமிக்க வேண்டும் என்றும்" கூறுகிறார் (Periyar, 2014).

## வரதட்சணை

பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கலில் மிகவும் முக்கியமானது 'வரதட்சணை' என்னும் கொடிய நோயே ஆகும். ஓரிரு சமூகத்தில் மட்டும் நிலவிய இந்நிலை இன்று அனைத்து சமூகங்களுக்கும் பரவியிருக்கிறது. பெரும் வரதட்ணை கொடுக்க வேண்டும் என்று பெற்றோர்களே பெண்குழந்தைகளை பெருஞ்சுமையாகவும், பாரமாகவும் கருதுகிறார்கள். 'மகாலட்சுமி' என்பது போன்ற படிமங்களால் பாராட்டப்பட்டாலும், வரதட்சணையுடன் வராத மணமகள் மூதேவி என்று மூலையில் உட்காரவைக்கப்படுகிறாள். இத்தாழ்வு மனப்பான்மை அவளது வாழ்நாளையே நரகமாக்கி விடுகிறது. பெண்கள் சமுதாயத்தில் நிற்கதியாக நிற்பதற்கு மிக முக்கிய காரணமே வரதட்சணை தான் என்று கருதினார்.

ஒரு பெண் வளர்ந்து வரும்போதே பல கணக்குகள் ஒவ்வொரு பெற்றோர்களின் மனதில் ஆராத ரணமாவே உள்ளன. அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டே தன் வாழ்நாளைக் கழிக்கிறார்கள். எந்த இடத்தில் இருந்து தன் பெண்டு பிள்ளைகளுக்கு வரன் வரும்? எவ்வளவு பவுன் கேட்பார்கள்? கையில் எவ்வளவு ரொக்கம் கேட்பான்? இரண்டு சக்கர வண்டியா? நான்கு சக்கர வண்டியா? என எப்பொழுதும் குழப்பத்துடனே கனவு கண்டு கொண்டிருப்பார்கள். ஆகவே 'பெண் பார்க்கும் படலத்தில் மாப்பிள்ளை சந்தையில் விலையென்ன சொல்லுங்கள்| என்ற நிலைமை அன்றும் இன்றும் நடைமுறையில் இருந்துகொண்டே தான் இருக்கிறது.

## உடன் கட்டை ஏறுதல்

உடன் கட்டை ஏறுதல் ஒழிந்த பின்பு கைம்மைக் கொடுமை மேலும் வலிமை பெற்று வந்தது. இம்முறையானது சங்க காலம் தொட்டே இருந்து வருகின்றது என்பதற்கு புறநானூற்றில் ~பெருங்கோப்பெண்டுவின்| பாடலே சாட்சியாக உள்ளது. தன் கணவன் இறந்தவுடன் தீப்பாய முயன்ற அரசியை அமைச்சர்கள் அனைவரும் தடுத்தும் கைம்மைத் துன்பத்திற்கு ஆளாவதை விட இறந்து விடுவதே மேல் என எண்ணினார். அரசியாக இருக்கும் பெண்ணுக்கே இந்நிலை என்றால் சாதரண பெண்கள் நிலை என்னவாக இருந்திருக்கும் என்பதை நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை இந்நிலையில் பெரிய மாற்றம் ஏதும் நிகழவில்லை. கணவனை இழந்த பெண் வெள்ளை சேலைதான் கட்ட வேண்டும், பொட்டும் பூவும் வைக்கக் கூடாது. கைம் பெண்களைக் கண்டால் எந்த ஆண்களுக்கும் அவர்கள் மீது அன்போ, ஆசையோ வரக்கூடாது என்பதில் சமூகம் கவனமாக இருந்தது. போர் காலங்களில் ஆண்கள் கொத்துக் கொத்தாக இறந்து போவார்கள் அவர்களுக்கும் இதே நிலைதான் இருந்திருக்கிறது.

## சதிக்கு எதிரான சட்டம்

கணவன் இறந்துவிட்டால் கதறி அழுவது மட்டுமல்லாமல் அவரின் உடல் எரிக்கப்படும் போது அதனுள் விழுந்து உயிர் விட வேண்டும் இதுதான் 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கம்.

இவ்வாறு உயிர் துறக்கும் பெண்ணானவள் 'சதி மாதா' என்னும் புனிதப் பட்டம் கிடைக்கும் என்று கட்டாயப்படுத்தி இச்சம்பவங்கள் நடத்தப்பட்டன.

இக்கொடிய வழக்கத்தை அக்காலத்தில் ஆங்கிலேய வியாபாரிக் கூட்டத் தலைவராயிருந்த வாரன்ஹேஸ்டிங்ஸ், சுவாமி தயானந்த சரசுவதி போன்ற இந்திய நாட்டு அறிவாளிகளும் பெருமுயற்சி செய்து, அக்கொடிய வழக்கத்தை ஒழித்துவிட்டனர். "உடன்கட்டை ஏறுவதை நிறுத்துவதற்காகப் போராடிய அக்காலத்திலும் இந்துமத ஆச்சாரமே அழிந்து போவதாகவும், மதத்திற்கே கேடு வந்துவிட்டதாகவும் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. பின்னாளில் அக்கூக்குரல் அடங்கி 'ஸ்ககமனம்' என்னும் உடன்கட்டையேறும் கொலை வழக்கம் இந்தியாவை விட்டு அறவே மறைந்தது" (Periyar, 2019). எனவே தான் பெண் என்பவள் மக்களின் மறுமணத்திற்கு எதிரிடையாக இருக்கும் கடவுள், வேதம், சமயம், புராணம், பழக்கம், ஒழுக்கம் முதலிய அனைத்தையும் ஒழித்தல் வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் கூறுகிறார்.

## அறிஞர் அண்ணாவின் பார்வையில் பெண்கள்

பேச்சாற்றலின் மூலம் ஈடு இணையற்றவராக விளங்கியவர் அறிஞர் அண்ணா. அறிஞர் அண்ணாவின் பேச்சானது கருத்தும் ஆற்றொழுக்கும் உடையதாகக் காணப்படும். பேச்சு மட்டுமல்லாமல் எழுத்திலும் அவர் வல்லவர் என்பதற்கு அவருடைய படைப்புகளான 'வேலைக்காரி' 'ஆளவந்தான்' 'ஓர் இரவு' 'சாய்வு நாற்காலி' 'பார்வதி பி.ஏ' போன்ற சிறுகதைகள் சான்றாகும். இவரின் சிந்தனைகளைப் படிப்போமானால் அந்தக் கதாபாத்திரம் திரும்பி நம்மிடம் போசுவதாய்த் தோன்றும். இதுவே அவருடைய தனிச்சிறப்பு ஆகும்.

சமுதாயத்தில் நிகழும் அவலங்கள் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகள், பாலியல் வன்கொடுமைகள் போன்றவற்றைத் தனது எழுத்தின் வாயிலாக வெளிப்படுத்துவதில் வல்லவர். அதுமட்டுமல்லாமல் கதை, சிறுகதை, நாடகம், திரைப்பட வசனம் போன்ற பன்முக படைப்புகள் மூலம் அடுக்கு மொழியாகவும், பகுத்தறிவு, சமூக முன்னேற்றக் கருத்துகள் எல்லாம் பாமர மக்கள் முதல் படித்த பண்டிதர் வரை ரசித்திருக்கிறார்கள். இதன் அடுத்த வளர்ச்சியானது பத்திரிக்கைத் துறையிலும் தடம் பதித்தது. எண்ணற்ற நாளேடுகளில் பணியாற்றி தம் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டிய கருத்துகளைத் துண்டு பிரசுரமாகவும் வெளியிட்டுள்ளார்.

## படைப்பாக்கத்தில் அண்ணாவின் பங்கு

அறிஞர் அண்ணாவின் எழுத்துக்களில் முக்கியப் பங்கு சமூகத்தில் எழும் சிக்கலில் பெண்ணியம் பற்றிய சிந்தனை வெகுவாக இருக்கும். பெரும்பாலும் அவரது படைப்புகளில் பெண்களுக்கான அவலங்களான குழந்தை மணம், பொருந்தா மணம், கட்டாய மணம், முறையற்ற காதல், விலைமகளிா், வரதட்சணை, சாதிக் கொடுமை, விதவைநிலை ஆகியவற்றை சாடுகிறார். "ஒரு இளம் மங்கையைக் கிழவனுக்குக் கல்யாணம் செய்வது என்பது அவள் வாழ்க்கையைச் சித்ரவதை செய்வதாகுமே! அம்மா! அது தெரிந்ததா உனக்கு? பொருத்தமற்ற திருமணத்தால் உன் மகளின் குணமும் நடையும் கூடக் கெட்டுவிடக் கூடுமே அது தெரியாதா உனக்கு? வயோதிகரை மணந்து வேதனையுடன் போரிடும் புனிதவதிகளின் விழிகளிலே வழிந்தேடும் நீர் இந்த நாட்டையே அழித்து வருகிறதே அது தெரிகிறதா அம்மா உனக்கு" என்று அந்த தாயைப் பார்த்துக் கேட்டு இச்சமுதாயத்தை திருத்த தனது உணர்வினை எழுப்புகிறார் (Mayilavelan, 2009).

"ஒரு குடும்பம், ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் பெண்கள் முன்னேற வேண்டும் ஆண்கள் பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டாலே, அவர்களுக்குச் சமுதாயத்தில் நல்ல அந்தஸ்தும் மதிப்பும் கிடைக்கும்" என்பதனை பார்வதி பி.ஏ என்ற நாவலின் கதாபாத்திரத்தில் போலியான வாழ்க்கைகளை இனம் கண்டறிந்து முன்னேற வேண்டும் என்று கூறுகிறார் (Periannan, 2009).

## கலைஞரின் பார்வையில் பெண்கள்

திராவிட இயக்க வரலாற்றில் பல்வேறு போராட்டங்களில் முன்னெடுத்த நிகழ்வுகளில் பெண்ணுரிமைப் போராட்டம் மிக முக்கியமானது. திராவிட இயக்கத் தலைவர்கள் பல்வேறு காலகட்டங்களில் பெண்ணுரிமைக்காகப் போராடி குரல் கொடுத்திருந்தாலும் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் கலைஞரின் பங்கு அளப்பரியது.

கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சியில் அமர்வதற்கு முன்பே அவரின் எழுத்துப் புரட்சியானது பெண்ணியம் பேசியது. அதற்கு உதாரணமாக கணவனை இழந்த விதவைப் பெண்களின் துயர் அறிந்த அவர் அவர்களை விதவை என்ற சொல்லால் குறிக்கும் போது கூட பொட்டு இல்லை எனக் கருதி அந்த சொல்லுக்கு மாற்றாக இரு திலகங்கள் வரும் வகையில் கைம்பெண் என்று அழைக்கத் தொடங்கினார்.

## பெண்களுக்கான திட்டங்கள்

ஆண்களைப் போன்றே பெண்ணுக்கும் அனைத்திலும் சம உரிமை வேண்டும் என்பதனை உணர்ந்த அவர் பெண்களின் மறுமலர்ச்சிக்குப் பெரிதும் ஆதரவளித்தார். பெண்களின் இந்நிலையைக் கண்ட கலைஞர் அவர்கள் பெண்களுக்காக மூவலூர் இராமமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு மறுமணத் திட்டம், அன்னைதெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் திருமண உதவித்திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி நினைவு மகப்பேறு நதியுதவித் திட்டம், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் காப்பகத் திட்டம் போன்ற இத்திட்டங்கள் அனைத்தையும் அவரது ஆட்சிக்காலத்தில் பெண்களுக்காகக் கொண்டு வந்தார்.

## பாரதிதாசன் பார்வையில் பெண்கள்

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு

மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே

ஊமை என்று பெண்ணை உரைக்கும் மட்டும்

உள்ளடங்கும் ஆமைநிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு" (Kalpanadasan, 2009)

என்பது அவரின் கொள்கை ஆகும். பெரும்பாலும் அவரது படைப்புகளைக் காண்கையில் பெண்ணுரிமை, பெண்கல்வி, சொத்துரிமை, கைம்மை மறுமணம் சமஉரிமை வழங்குவது போன்றவற்றை ஆதரித்தார். சடங்குகளினால் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் பெண்களை எல்லாம் விழிப்படையச் செய்ய வேண்டுமானால் பெண்களுக்குக் கல்வி முக்கியம் என வழியுறுத்தி கல்வியின் அவசியத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு பெண் குழந்தை பிறந்து இவ்வுலகிற்கு வந்த பின்பு அங்கு தன் சுற்றத்தாருடன் வாழும் நிலையானது அவளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதமாக இருக்க வேண்டும். நல்ல நிலையில் வாழ தனக்கென பதிய பாதையினை அமைத்துக் கொண்டு வாழப்பழகிக் கொள்ள வேண்டும். மற்றவர்களால் அது நமக்கு கிடைக்கும் என்று எண்ணாமல் நமக்கான நீதியை நாம்தான் போராடி பெற வேண்டும் என்பதனை வலியுறுத்த பாரதிதாசன் பெண்ணுக்கு நீதி என்ற தனது கவிதையின் மூலம்

"கல்லென உன்னை மதிப்பார்- கண்ணில்

கல்யாண மாப்பிள்ளை தன்னையுங் காட்டார்

வல்லி உனக்கொரு நீதி- இந்த

வஞ்சகத் தரகர்க்கு நீ அஞ்ச வேண்டாம்" (Bharathidasan, 2010)

என்று வெளிப்படுத்துகிறார். இவ்வுலகில் பெண்ணிற்கான நீதியை நிலைநாட்ட வேண்டுமாயின் அஞ்சாமல் எடுத்த காரியத்தில் துணிவுடன் போராடி வெற்றி பெற வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறார்.

ஆண் குழந்தைகளைப் போற்றி பாராட்டி சீராட்டும் தாலாட்டுகளுக்கு மத்தியில் பெண் குழந்தைகளுக்கு என தாலாட்டுப் பாடலை பாடிய பெருங் கவிஞர் இவர் ஒருவரே ஆவார்.

"ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ

சோலை மலரே சுவர்ணத்தின் வார்ப்படமே

காலை இளஞ் சூரியனைக் காட்டும் பளிங்குருவே

வண்மை உயர்வு மனிதர் நல மெல்லாம்

பெண்மையினால் உண்டென்று பேசவந்த வெண்ணழகே

நாய் என்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்

தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவளே" (Kalpanadasan, 2009)

என்றப் பாடலின் மூலம் ஆண்குழந்தைக்கு நிகராக பெண்குழந்தையும் பேண வேண்டும் என வெளிப்டுத்துகிறார்.

## முடிவுரை

பெண்கள் நம்நாட்டின் கண்கள் என்ற சிந்தனைகளுக்கு உயிரூட்டும் வகையில் இருபதாம் நூற்றாண்டுத் தமிழக மறுமலர்ச்சியில் திராவிட இயக்க படைப்பாளர்களின் பங்கு அளப்பரியது. சங்காலம் முதல் தற்காலம் வரை பெண்கள் சந்தித்த இன்னல்களைக் களைய வந்த தலைவர்களின் பங்கு முக்கிய இடமாகக் கருதப்படுகிறது. இன்றைய நவீனக் காலகட்டத்தில் பெண்கள் சுதந்திமாக ஒரு செயலைச் செய்ய முற்படுகிறார்கள் என்றால் இவர்களின் உந்துசக்தியே முக்கியக் காரணமாகும்.

## References


Bharathidasan, (2010) Bharathidasan Kavithaigal, Chennai, India.

Kalpanadasan, (2009) Bharathidasan padalgal, Paavai Publications, Chennai, India.

Mayilavelan, P., (2009) Annavin Padaippugalum Ezhuchiyuttum Nigalchigalum, Tamil Nadu Education Research and Development Institute, Chennai, India.

Periannan, G., (2009) Aaivualarkal Paarvaiyil Arignar Anna, Tamil Nadu Education Research and Development Institute, Chennai, India.

Periyar, (2014) Periyar Kalanjiyam, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Sutha, M., Priya, A., Ravikumar, R., (2020) Unchanging Struggle in a Changing World: Unmasking the Social Mechanism in Female Verses, International Research Journal of Tamil, 2(2), 1-11. https://doi.org/10.34256/irjt2021

Thanthai Periyar, (2019) Pen En Adimaiyanal, Periyar Suyamariyathai Pirachara Niruvanam, Chennai, India.

Vijayalakshmi, T., (2021) Status of Women in Religious Construction in Tamil Nadu, International Research Journal of Tamil, 3(3), 75-81. https://doi.org/10.34256/irjt21310

Vijayalakshmi, T., (2022) Space and Language of Women, International Research Journal of Tamil, 4(1), 44-54. https://doi.org/10.34256/irjt2216

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License